மாகாணக் கல்வித் திணைக்களம்

வட மாகாணம்

மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை - 2016

புவியியல்

தரம் - 10 நேரம் :- 3.00 மணி

சுட்டெண் :.......................................... புள்ளி :-

**கவனிக்க.**

**எல்லா வினாக்களுக்கம் விடை தருக.**

**சரியான அல்லது பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.**

- **1 – 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இடைவெளிக்கு பொருத்தமான விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. புவியின் மேற்பரப்பின் பரப்பளவு ..................... ஆகும்
   ( 510 மி.ச.கி.மீ / 149 மி.ச.கி.மீ / 361 மி.ச.கி.மீ )

2. மின்னியக்கச் செயற்பாடுகள் இடம் பெறும் வளிமண்டலப் படை ..................... மண்டலம் ஆகும்
   ( மாறன் / படை / இடை )

3. வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட் வாயுவின் சதவீதம் ..................... ஆகும்
   ( 0.93 / 0.03 / 0.3 )

4. சமுத்திர ஓடு ..................... பாறைகளைக் கொண்டுள்ளது.
   ( பசால்ட் / நைஸ் / கருங்கல் )

5. ஆபிரிக்காவுக்கு உரித்தான கண்ட மேடையில் ..................... தீவு அமைந்துள்ளது
   ( மாலைதீவு / மடகஸ்கார் / சுமாத்திரா )

6. அதிக விளைச்சல் தரும் புதிய கோதுமை இனங்களில் ஒன்றாக ..................... உள்ளது.
   ( நொறின் - 10 / கல்யாணி / கனொலா )

7. இலங்கையில் அதிகளவு தேயிலை உற்பத்தி செய்யப்படும் மாவட்டம் ..................... ஆகும்.
   ( பதுளை / நுவரெலியா / கண்டி )

8. இலங்கையின் இறப்பர் பயிர்ச்செய்கைக்குச் சாதகமான மண் ..................... ஆகும்.
   ( செம்பூரான் / வண்டல் / மணல் மண் )

Education கல்வி අධ්‍යාපන

9. அண்மைக்காலத்தில் இரும்புருக்குக் கைத்தொழிலில் ………………… நாடு முன்னணி வகிக்கின்றது.
( யப்பான் / தென்கொரியா / சீனா )

10. இலங்கையின் தனித்துவமான பொருளாதார வலயம் ………………… வரை பரந்துள்ளது.
( 12 – 24 கி.மீ / 0 – 12 கி.மீ / 24 – 200 கி.மீ )

- **11 – 15 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களை சரியாயின் 'ச' இனையும் பிழையாயின் 'பி' இனையும் சுற்றி வட்டமிடுக.**

11. சீமா என்னும் அடித்தளப் பாறைப்படையின் மீது சீயல் படை அமைந்துள்ளது. (ச / பி)
12. உலகிலே மிக உயரத்தில் அமைந்துள்ள ஏரி தித்திக்காக ஆகும். (ச / பி)
13. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அதிகளவில் ஊழியச் செறிவுமிக்க பயிர்ச்செய்கை நடவடிக்கைகளே இடம்பெறுகின்றன. (ச / பி)
14. இலங்கையில் புதிய சிறு ஏற்றுமதிப் பயிர்களாக பூக்கள், காய்கறிகள் என்பன சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. (ச / பி)
15. இலங்கையில் 2/3 பங்கு எருமைகள் ஈரவலயத்திலே வளர்க்கப்படுகின்றன. (ச / பி)

- **16 – 20 வரையிலான வினாக்களில் 'அ' மற்றும் 'ஆ' ஆகிய நிரல்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கேற்ப 'ஆ' நிரலை இணைக்கும் போது வரும் சரியான விடைகளைக் குறித்து நிற்கும் இலக்கத்தினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

16. உலகில் அமைந்துள்ள கண்டங்கள் 'அ' நிரலிலும் அதில் உள்ளடங்கும் தீவுகள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான விடைத் தொகுதியின் இலக்கத்தைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. ஆசியா | A பவின் தீவு |
| 2. வட அமெரிக்கா | B அயர்லாந்து |
| 3. ஐரோப்பா | C தஸ்மானியா |
| 4. அவுஸ்திரேலியா | D தாய்வான் |

1. DCBA 2. CBAD 3. DACA 4. DABC (…….)

17. புவியின் அமைப்பின் படைகள் 'அ' நிரலிலும் அவற்றில் உள்ள மூலகங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தி விடைத் தொகுதியின் இலக்கத்தைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. கண்ட ஓடு | A சிலிக்கா, அலுமினியம் |
| 2. சமுத்திர ஓடு | B சிலிக்கா, மக்னீசியம் |
| 3. மேல் மூடி | C ஒலினின், சிலிக்கேற் |
| 4. கோளவகம் | D நிக்கல், இரும்பு |

Education கல்வி

1. DCBA 2. BACD 3. ABCD 4. CBAD (……)

18. இலங்கையின் விவசாயப் பயிர்கள் 'அ' நிரலிலும் அவற்றின் ஆராய்ச்சி நிலையங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. இரு நிரல்களையும் தொடர்புபடுத்தி வரும் விடைத் தொகுதியின் இலக்கத்தைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. தென்னை | A தலவாக்கல |
| 2. இறப்பர் | B மகாஇலுப்பலம |
| 3. தேயிலை | C லுணுவில |
| 4. நெல் | D அகலவத்தை |

1. CDAB 2. ABCD 3. CDBA 4. DCAB (……)

19. இலங்கை 1: 50000 இடவிளக்கப் படமொன்றில் அடங்கும் தகவல்கள் சில 'அ' நிரலிலும் அவை இடவிளக்கப்படத்தில் காட்டப்பட்டுள்ள இடங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. இரு நிரல்களையும் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியின் இலக்கத்தினைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. இடவிளக்கப்படத்தின் பெயர் | A – உள் எல்லைக் கோடு |
| 2. பௌதிக, கலாசார அம்சங்கள் | B – வெளி எல்லையின் கீழ் ஓரம் |
| 3. அளவுத்திட்டம் | C – வெளி எல்லையின் மேல் ஓரம் |
| 4. தேசிய ஆள்கூறுகள். | D – படத்தின் முகப்பு |

1. CDAB 2. CDBA 3. CABD 4. DCBA (……)

Education கல்வி

20. உலகின் பிரதான பயிர்ச்செய்கை 'அ' நிரலிலும் அவற்றிற்கு பொருத்தமான பௌதிக காரணிகள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றினைத் தொடர்புபடுத்திச் சரியான விடைத் தொகுதியின் இலக்கத்தினைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. கோதுமை | A – உவர்கலந்த மணல் மண் |
| 2. நெல் | B – செம்பூரான் மண் |
| 3. இறப்பர் | C – வண்டல் மண் |
| 4. தென்னை | D – சேணாசம் மண் |

1. DCBA 2. DCAB 3. ABCD 4. CABD (…….)

- **21 முதல் 25 வரையான வினாக்களின் இடை வெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.**

21. உலகின் பிரதான காலநிலை வலயங்களில் தென்முனைவு $90^{o}$ யில் சராசரி வெப்பநிலை ………………… ஆகும்.


22. உயரம் குறைந்த பரந்த பிரதேசத்திலே காணப்படும் தட்டையான நிலம் ………………… எனப்படும்.

23. இலங்கையின் தேயிலையைக் கொள்வனவு செய்வதில் ஈடுபடும் பிரதான நாடுகள் சார்ந்துள்ள வலயம் ………………… என அழைக்கப்படுகின்றது.

24. கடல் மட்டத்திலிருந்து 12 முதல் 50 வரையிலான கிலோமீற்றர் உயரம் வரையில் பரந்துள்ள வளிமண்டலப் படை ………………… எனப்படும்.

25. இலங்கையின் 1: 50000 மெற்றிக் இடவிளக்கத் தேசப்படத்தில் ………………… மெற்றிக் படத்தாள்கள் உள்ளன.

- **26 முதல் 28 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருப்படத்தினைப் பயன்படுத்துக.**





26. இலங்கையில் அதிக நெல் பயிரிடப்படும் மாவட்டத்தினை ………………… எழுத்து குறித்துக் காட்டுகின்றது.

27. அம்பேவல பாற்பண்ணை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தை ………………… எழுத்து குறித்துக் காட்டுகின்றது.

28. தற்பொழுது இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் மாவட்டங்களில் ஒன்றைக் குறிக்கும் எழுத்து ………………… ஆகும்.

Education
கல்வி
අධ්‍යාපන

- **29 ஆம் 30 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ் தரப்பட்டுள்ள படத்தினைப் பயன்படுத்துக.**




29. புவியமைப்பின் குறுக்கு வெட்டு முகத்தின் மோஹோவிச் தொடர்ச்சியின்மை வலயத்தைக் காட்டும் எழுத்து ……………… ஆகும்.

30. புவி அமைப்பின் குறுக்கு வெட்டு முகத் தோற்றத்தில் மூடியையும் மையத்தையும் பிரிக்கும் கூற்றன்பேர்க் தொடர்ச்சியின்மை வலயத்தைக் காட்டும் எழுத்து ……………… ஆகும்.

- **31 முதல் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்து, அதற்குரிய இலக்கத்தினை உரிய புள்ளிக் கோட்டில் எழுதுக.**

31. ஓசோன் படை அமைந்துள்ள வளிமண்டலப் படை எது?

1. மாறன் மண்டலம்
2. படைமண்டலம்
3. இடைமண்டலம்
4. வெப்பமண்டலம் (…….)

32. இலங்கை அமைந்துள்ள தகடு யாது?

1. இந்து அவுஸ்திரேலியத் தகடு
2. ஆபிரிக்கத் தகடு
3. ஐரோ ஆசியத் தகடு
4. பசுபிக் தகடு (…….)

33. மொத்த நிலத் திணிவில் 29. 5 சதவீதம் பரம்பியுள்ள கண்டம்

1. ஆபிரிக்கா 2.வட அமெரிக்கா 3. ஆசியா 4. தென்னமெரிக்கா (……)

- **34 ஆம் 35 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் கூற்றுக்களினைப் பயன்படுத்துக.**

A – ஓசோன் பரம்பல்
B – உயரம் அதிகரித்தல்
C – வளியின் செறிவு குறைவடைதல்
D – உயிரின வாழ்க்கை

34. ஒரு காரணியின் அதிகரிப்பு மற்றொரு காரணியின் தொடர்ச்சியான குறைவுக்கு காரணமாக அமையும் இரண்டு கூற்றுக்களையும் கொண்ட தொகுதி

1. CB 2. AC 3. CA 4. AD (……)

35. ஒரு காரணியின் பரம்பல் மற்றொரு காரணியின் நிலைத்திருப்பினைத் தீர்மானித்திருக்கின்றது. அவ்வாறான காரணியைக் காட்டும் விடை

1. CB 2. AC 3. CA 4. AD (……)

36. 1: 50,000 மெற்றிக் இடவிளக்கத் தேசப்படத்தில் 2Cm x 2cm சதுரமான பகுதி நிலத்தில்

1. 1 சதுர கி.மீ
2. 2 சதுர கி. மீ
3. 4 சதுர கி .மீ
4. 8 சதுர கி .மீ (……)

37. உலகில் இயற்கை இறப்பர் உற்பத்தியில் 95 சதவீதத்தினை உற்பத்தி செய்யும் பிரதேசங்களை உள்ளடக்கிய தொகுதி

1. தென்னாசிய மற்றும் தென்னமெரிக்க நாடுகள்
2. தென்னாசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகள்
3. தென்னமெரிக்க மற்றும் கிழக்காபிரிக்க நாடுகள்
4. தென்கிழக்காசிய மற்றும் கிழக்காபிரிக்க நாடுகள் (……)

38. மோட்டார் வாகனக் கைத்தொழிலில் துரித வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் தொகுதி

1. இலங்கை, சீனா, இந்தியா, பூட்டான்
2. இந்தியா, தென்கொரியா, பாகிஸ்தான், இலங்கை
3. நேபாளம், யப்பான், இந்தியா, தென்கொரியா
4. சீனா, யப்பான், தென்கொரியா, இந்தியா (……)

Education கல்வி අධ්‍යාපන

39. நிலத்தினால் முழுவதும் சூழப்பட்ட கடல்கள்

1. ஏரல் கடல், கருங்கடல்  2. கருங்கடல், மத்தியதரைக் கடல்
3. ஏரல்கடல், கஸ்பியன் கடல்  4. கருங்கடல், செங்கடல்  (……)

40. படை மண்டலத்தின் மேல் எல்லையாக அமைந்து காணப்படுவது.

1. மாற்றரிப்பு எல்லை  2. இடைத்தரிப்பு எல்லை
3. படைத்தரிப்பு எல்லை  4. வெப்பத்தரிப்பு எல்லை  (……)

(40 x 1 = 40 புள்ளிகள்)

**வினாத்தாள் II**

**இவ்வினாத்தாள் பகுதி I, பகுதி II எனும் இரு பிரிவுகளைக் கொண்டது. பகுதி I 'அ, ஆ, இ' கட்டாயமானது. பகுதி II இலிருந்து நான்கு வினாக்களை தெரிவு செய்க.**

**பகுதி I**

01. அ) 1:50000 இடவிளக்கப்படத்தின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. மிகப் பழமையான தேசப்படமாகக் கருதப்படும் படம் எது?
(மொசப்பத்தேமியப்படம் / தொலமியின்படம் / சுமேரியப்படம்)

2. 1: 50,000 தேசப்படங்களில் சமவுயரக்கோடுகளின் இடைவெளி யாது?
(10m / 20m / 50m )

3. 1: 50,000 இடவிளக்கத் தேசப்படங்களை தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் எறியம் எது?

(மோக்கற்றோவின் எறியம் / பொன்னின் எறியம் / சைன் வளைகோட்டெறியம்)

4. நிர்வாக எல்லைகளை காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நிறம் என்ன?
(சிவப்பு/ கறுப்பு/ செம்மஞ்சள்)

5. புவியின் வடக்கு என அறியப்படும் திசை?
(அளியடைப்பு வடக்கு / உண்மை வடக்கு / காந்த வடக்கு)

6. A தர பிரதான வீதியின் குறியீட்டினை வரைந்து காட்டுக?

7. 1: 50,000 இடவிளக்கப்படத்தில் ▲ இக்குறியீடு குறித்துக்காட்டும் விடயம் யாது?


8. 1:50,000 இடவிளக்கப்படத்தின் வெளிமேல் எல்லையில் உள்ள தகவல்கள் இரண்டினைத் தருக?

9. படங்களின் இரு வகைகளைத் தருக?

kalvi.lk

10. 1:50,000 அளவுத்திட்டத்திற்குரிய நேர்கோட்டு அளவுத்திட்டத்தினை வரைந்து காட்டுக. (10 புள்ளி)


ஆ) வழங்கப்பட்ட உலகப்படத்தினை நன்கு அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




1. படத்தில் குறிக்கப்பட்டுள்ள A, B, C ஆகிய நதிகளுள் குவாங்கோ நதியினைக் குறிக்கும் எழுத்து எது?
2. படத்தில் D, E, F ஆகிய எழுத்துக்களால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மலைகளில் டிராகன்ஸ்பேர்க் மலையைக் குறிக்கும் எழுத்து எது?
3. படத்தில் G, H, J ஆகிய எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள கோதுமை செய்கை பண்ணப்படும் பிரதேசங்களில் சீனாவைக் குறிக்கும் எழுத்து எது?
4. படத்தில் K, L, M எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள கடல்களில் கஸ்பியன் கடலைக் குறிக்கும் எழுத்து எது?
5. P, Q, R ஆகிய எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்படும் நாடுகளில் இரும்பு உற்பத்தியில் ஈடுபடும் யப்பான் நாட்டினைக் குறிக்கும் எழுத்து எது? (05 புள்ளி)

இ) வழங்கப்பட்ட இலங்கைப்படத்தினை நன்கு அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. படத்தில் A, B, C எனும் எழுத்துக்களால் குறித்துக் காட்டப்பட்டுள்ள இடங்களில் தெய்வேந்திர முனையைக் குறிக்கும் எழுத்து எது?
2. படத்தில் D, E, F ஆகிய எழுத்துக்களால் குறித்துக் காட்டப்படும் தீவுகளில் நெடுந்தீவினைக் குறிக்கும் எழுத்து எது?
3. படத்தில் G, H, J என்னும் எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்படும் மாவட்டங்களில் மிகக் குறைவாக நெல் உற்பத்தி செய்யப்படும் மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து எது?




4. படத்தில் K, L, M ஆகிய எழுத்துக்களால் குறித்துக் காட்டப்படும் மாவட்டங்களில் இறப்பர் பயிர்ச்செய்கை அதிகம் நடைபெறும் கேகாலை மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து யாது?
5. படத்தில் P, Q, R எழுத்துக்கள் குறித்துக் காட்டப்படும் மாவட்டங்களில் மரமுந்திரிகைச் செய்கை இடம்பெறும் மன்னார் மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து யாது? (05 புள்ளி)

## பகுதி II

02. I. வளிமண்டலத்தின் நான்கு பிரதான படைகளும் எவை? (2 புள்ளிகள்)
II. வெப்ப நழுவு வீதம் என்றால் என்ன? (3 புள்ளிகள்)
III. படைமண்டலத்தின் சிறப்பியல்புகள் 5 தருக? (5 புள்ளகள்)

03. I. உலகின் அகலக் கோட்டு வெப்பநிலைப் பரம்பலை அடிப்படையாகக் கொண்டுபிரதான மூன்று காலநிலை வலயங்களைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)
II. அயனக் காலநிலை வலயத்தின் எல்லையை வரையறை செய்க. (3 புள்ளிகள்)
III. இடைவெப்பக் காலநிலையின் இயல்புகள் நான்கினைத் தருக? (4 புள்ளிகள்)

04. I. ஆசியாவிற்கு வெளியே நெற் பயிர்ச்செய்கை நடைபெறும் பிரதேசங்கள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)
II. நெற்செய்கைப் பரம்பலுக்கு ஏதுவான பௌதிக காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
III. நெற் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)

05. I. இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் மாவட்டங்கள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)
II. இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்களை இட உயரத்தின் அடிப்படையில் வகைப்படுத்துக. (3 புள்ளிகள்)
III. இலங்கையின் தேயிலைப் பயிர்ச்செய்கையை விருத்தி செய்வதால் பொருளாதாரத்தில் ஏற்படும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)

06. I. இலங்கையின் பின்வரும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் செய்கை பண்ணப்படும்மாவட்டங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக?
a. மிளகு
b. ஏலம் (3 புள்ளிகள்)
II. இலங்கை அரசு சிறுஏற்றுமதி பயிர்களின் விருத்தியில் விசேட கவனம் செலுத்துவதற்கான காரணங்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)
III. இலங்கையின் பொருளாதாரத்தில் பழச்செய்கை முக்கியத்துவம் பெறுவதற்கான காரணிகள் மூன்று குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக? (4 புள்ளிகள்)

07. I. உலகின் பிரதான தயாரிப்புக் கைத்தொழில்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)
II. ஆரம்ப காலத்தில் கப்பல் கட்டும் கைத்தொழிலில் விருத்தி அடைந்த நாடுகள் கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள் மூன்று தருக? (3புள்ளிகள்)
III. புதிய நாடுகள் கப்பல் கட்டும் தொழிலில் முன்னணி வகிப்பதற்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக? (5புள்ளிகள்)

kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**